




வடக்கம்பராய் பூதராசி அம்மன் கோவிலடியை பிறப்பிடமாகவும்,

நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட

# திருமதி. பர்வதாம்பாள் கோவிந்தராஜா

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# பர்(று)வத மலர்

05-08-2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ





# சமர்ப்பணம்

மனிதருள் சிறந்த மானிடமாய்
அன்பு நிறைந்த பேரொளியாய்
பெற்றவளைக் கோவிலென்றும்
உடன் பிறப்புகளை உயிர் என்றும்
கடமையே வாழ்வு என்றும்
வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும்
தெய்வமாகிவிட்ட எங்கள் குடும்பத் தலைவியே
திருமதி. பர்வதாம்பாள் கோவிந்தராஜா
பாதக் கமலங்களுக்கு இம் மலரைக்
காணிக்கையாக சமர்ப்பிக்கின்றோம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! சாந்தி!!!**

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

அமரர்

# திருமதி. பர்வதாம்பாள் கோவிந்தராஜா



மலர்வு
18-11-1931

உதிர்வு
21-07-2012

## திதி வெண்பா

ஆண்டு நந்தனத்தின் ஆடிப் பூர்வபக்கம்
பூண்டநற் திருதியையே பூமிவிட்டு - வேண்டி
மாதரசி பர்வதாம்பாள் மனம்நாடும் முருகேசன்
பாதமதை சேர்ந்தடைந்த நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# தோத்திரப்பாக்கள்



## விநாயகர் துதி

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகன பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

## தேவாரம்

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லதிக்கி யாதுமோர் குறைவிலைக்
கண்ணில் நல்லஃதுறும் கழுமல வளநகர்
பெண்ணல் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே

## திருவாசகம்

பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்தோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியை
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கட லீந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம் பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத வைந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுக னைப்பரவி யஞ்சலிசெய் கிற்பாம்.

## திருப்புகழ்

உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் தேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேன்பருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்!

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தர் அனுபூதி

காப்பு

நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந் துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமாலை சிறந்திடவே
பஞ்சக் கரவானை பதம் பணிவாம்.

நூல்

ஆடும் பணிவேலணி சேவலெனப்
பாடும் பணிவே பணியா யருள்வாய்
தேடுங் கயமா முகனைச் செருவிற்
காடுந் தனியா னைசகோ தரனே.

1

உல்லாச நிராகுல யோக விதச்
சல்லாப விநோதனு நீயலையோ
எல்லாமற என்னை யிழந்த நலஞ்
சொல்லாய் முருகா கரபூ பதியே.

2

வானோ புனல்பார் கனல்மா ருதமோ
ஞானோ தயமோ நவில்நான் மறையோ
யானோ மனமோ எனையாண் டவிடந்
தானோ பொருளா வதுசண்முகனே.

3

வளைபட்டகைம் மாதொடு மக்க ளெனுந்
தளைபட் டழியத் தகுமோ தகுமோ
கிளைபட் டெழுசு ரூரமுங் கிரியுந்
தொளைபட் டுருவத் தொடு வேலவனே.

4

மகமாயை களைந்திட வல்ல பிரான்
முகமாறு மொழிந்து மொழிந் திலனே
அகமாடை மடந்தையை ரென் றயருஞ்
சகமாயையுள் நின்று தயங் குவதே.

5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணியா னமனோ சிலைமீ துனதாள்
அணியா ரரவிந்த மரும்பு மதோ
பணியா வென வள்ளி பதம் பணியுந்
தணியா வதிமோத தயா பரனே.

6

கெடுவாய் மனனை கதிகேள் கரவா
திடுவாய் வடிவே லிறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடுவே தனைதுள் படவே
விடுவாய் விடுவாய் வினையா வையுமே.

7

அமரும் பதிதே ளகமா மெனுமிப்
பிமரங் கெட்மெய்ப் பொருள் பேசியவா
குமரன் கிரிராச குமாரி மகள்
சமரம் பொரு தானவ நாசகனே.

8

மட்டூர்குழல் மங்கையர் மையல் வலைப்
பட்டூசல் படும் பரிசென் றொழிவேன்
தட்டூ டறவேல் சயிலத் தெறியும்
திட்டூர நிராகுல நிர்ப் பயனே.

9

கார்மா மிசைகா லன்வரிற் கலபத்
தேர்மா மிகைவந் தெதிரப் படுவாய்
தார்மார்ப வலாரி தலாரி யெனுஞ்
சூர்மா மடியத் தொவே லவனே.

10

கூகா வெனவென் கிளைகூ டியழப்
போகா வகைமெய்ப் பொருள்பே சியவா
தாகாசல வேலவ நாலு கவித்
தியாகா கரலோக சிகா மணியே.

11

செம்மான் மகளைத் திருடுந் திருடன்
பெம்மான் முரகன் பிறவா னிறவான்
சும்மா இருசொல் லறவென் றலுமே
அம்மா பொரு ளொன்று மறிந்திலனே.

12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன் தனிவேல் முனிநங் குரவென்
றருள்கொண் டறியா ரறியுந் தரமோ
உருவன் றருவன் றுளதன் றிலதன்
றிருளன் றொளியன் றென்நின் றதுவே.

13

கைவாய் கதிர்வேல் முரகன் கழல்பெற்
றுய்வாய் மனனே யொழிவா யொழிவாய்
மெய்வாய் வழி நாசியொடுஞ் செவியாம்
ஐவாய் வழி செல்லு மவாவினையே.

14

முருகன் குமரன் குகனென்று மொழிந்
துருகுஞ் செயல்தந் துணர்வென் றருள்வாய்
பொருபுங் கவரும் புவியும் பரவுங்
குருபுங்கவ எண்குண பஞ் சரனே.

15

பேராசை யெனும் பிணியிற் பிணிபட்
டோ ரா வினையை னுழலந் தகுமோ
வீரா முதுசூர் படவே லெறியுஞ்
சூரா சுரலோக துரந் தரனே.

16

யாமோதிய கல்வியு மெம் மறிவுந்
தாமே பெற வேலவர் தந்தனாற்
பூமேல் மயல் போ யறமெய்ப் புணர்வீர்
தாமேல் நடவீர் நடவீ ரினியே.

17

உதியா மரியா வுணரா மறவா
விதிமா லிறயா விமலன் புதல்வா
அதிகா வநகா வமரா
பதிகா வலசூர் பயங் கரனே.

18

வடிவுந் தனமும் மனமுங் குணமுங்
குடியுங் குலமுங் குடிபோ கியவா
அடியந் தமிலா அயில்வே லரசே
மிடி யென்றொரு பாவி வெளாப் படினே.

19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிதா கியமெய்ப் பொருளுக் கடியேண்
உரிதா வுபதேச முணர்ந் தியவா
விரிதாரண விக்ரம் வேளி மையோர்
புரிதா ரக நாக புரந்தரனே.

20

கருதா மறவா நெறிகாண எனக்
கிருதாள் வனசந் தரஎன் றிசைவாய்
வரதா முருகா மயில்வா கனனே
விரதா கரசூர விபாட ணனே.

21

காளைக் குமரேச னெனக் கருதித்
தாளைப் பணியத் தவமெய் தியவா
பாளைச் சூழல் வள்ளி பதம்புணியும்
வேளைச் சுரபூ

22

அடியைச் குறியா தறியா மையினால்
முடியக் கெடவோ முறையோ
வடிவிக் ரமமேல் மகிபா குறயின்
கொடியைப் புணருங் குணபூத ரனே.

23

கூர்வேல் விழி மங்கையர் கொங்கையிலே
சேர்வே னருள் சரேவு மெண்ணு மதோ
சூர்வே ரொடு குன்று தொளைத்த நெடும்
போர்வேல புரத்தா பூப தியே.

24

மெய்ய யெனவேவ் வினைவாழ் வையுகந்
தையோ அடியே னலையத் தகுமோ
கையோ அயிலோ கழலோ முழுதுஞ்
செய்யோய் மயிலே றிய சேவகனே.

25

ஆதார மிலே னருளைப் பெறவே
நீதா னொரு சற்று நினைந்திலையே
வேதாகம ஞான விநோ தமனோ
கீதா சுரலோக சிகா மணியே.

26



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னே நிகர்வாழ்வை விரும்பிய யான்
என்னே விதியின் பயனிங் கிதுவோ
பொன்னே மணியே பொருளே யருளே
மன்னே மயிலேறிய வானவனே.

27

ஆனா அமுதே அயில்வே லரசே
ஞானா கரனே நவிலத் தகுமோ
யானாகிய வென்னை விழுங்கி வெறுந்
தானாய் நிலைநின் றதுதற் பரவே.

28

இல்லே யெனுமா யையி லிட்டனைநீ
பொல்லே னறியாமை பொறுத் திலையே
மல்லே புரி பன்னிரு வாகுவிலென்
சொல்லே புனையுஞ் சுடர்வே லவனே.

29

செல்வா னுரவிற் றிகழ்வே லவனன்
றொவ்வா ததெென வுணர்வித் ததுதான்
அவ்வா றறிவா ரறிகின் றதலால்
எவ்வா றொருவர்க் கிசைவிப் பதுவே.

30

பாழ்வாழ் வெனுமிப் படுமா யையிலே
வீழ்வா யென என்னை விதித்தனையே
தாழ்வா னவைசெய் தனதா முளவோ
வாழ்வா யினிநீ மயில்வா கனனே.

31

கலையே பதறிக் கதறித் தலையூ
டலையே படுமா றதுவாய் விடவோ
கொலையே புரி வேடர்குலப் பிடிதோய்
மலையே மலை கூறிடு வாகையானே.

32

சிந்தா குலவில் லொடுசெல் லமெனும்
விந்தா டவியென்று விடப் பெறுவேன்
மந்தா கினிதந்த வரோ தயனே
கந்தா முரகா கருணா கரனே.

33



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கார மடந்தையர் தீநெறி போய்
மங்கார லெனக்கு வரந்தருவாய்
சங்கராம சிகா வலசண் முகனே
கங்கா நதி பால க்ருபாகரனே.

34

விதிகாணு முடம்பை விடா வினையனே
கதிகாண மலர்க்கழ லென் றருள்வாய்
மதிவா ணுதல்வள்ளியையல் லதுபின்
துதியா விரதா சுரபூ பதியே.

35

நாதா குமரா நமவென் றரனார்
ஓதா யெனவரே தியதெப் பொருள்தான்
வேதா முதல் விண்ணவர் சூடுமலர்ப்
பாதா குறமின் பதசே கரனே.

36

கிரிவாய் விடுவிக் ரம வேலிறையோன்
பரிவா ரமெனும் பதமே வலையே
புரிவாய் மனனே பொறையா மறிவால்
அரிவா யடியொடு மகந் தையையே.

37

ஆதாளிய யொன் றறியே னையறத்
தீதாளியை யாண்டது செப் புமதோ
சூதாள கிராத குலிக் கிறைவா
வேதாள கணம் புகழ்வே லவனே.

38

மாவேழ் சனனங் கெடமா யைவிடா
மூவேடணை யென்று முடிந் திடுமோ
கோவே குறமின் கொடிதோள் புணருந்
தேவே சிவ சங்கர தேசிகனே.

39

வினையோட விடுங் கதிர்வேல் மறவேன்
மனையோடு தியங்கி மயங் கிடவோ
கனையோ டருவித் துறையோடு பசுந்
தினையோ டிதணோடு திரிந் தவனே.

40



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாகா தெனையே சரணங் களிலே
காகா நமனார் கலகஞ் செயுநாள்
வாகா முருகா மயில்வா கனனே
யோகா சிவஞா னொபதே சிகனே. 41

குறியைக் குறியாது குறித்தறியும்
நெறியைத் தனிவேலை நிகழ்த் திடலுஞ்
செறிவற் றுலகோ டுரைசிந் தையுமற்
றறிவற் றறியா மையு மற்றதுவே. 42

தூசா மணியுந் துகிலும் புனைவாள்
நேசா முருகா நினதன் பருளால்
ஆசா நிகளந் துகளா யின்பின்
பேசா அநுபூதி பிறந் ததுவே. 43

சாடுந் தனிவேல் முருகன் சரணஞ்
சூடும் படிதந் ததுசொல் லுமதோ
வீடுஞ் சுரர்மா முடிவே தமும்வெங்
காடும் புனமுங் கமழுங் கழலே. 44

கரவா கியகல்வி யுளார் கடைசென்
றிரவா வகைமெய்ப் பொருளீ குவையோ
குரவா குமரா குலிசா யுதகுஞ்
சரவா சிவயோக தயா பரனே. 45

எந்தாயு மெனக் கருள்தந்தையுநீ
சிந்தா குலமா னவைதீர்த் தெனையாள்
கந்தா கதிர்வே லவனே யுமையாள்
மைந்தா குமரா மறைநா யகனே. 46

ஆறா றையுநீத் ததன்மேல் நிலையைப்
பேறா வடியேன் பெறுமா றுளதோ
சீறா வருசூர் சிதைவித் திமையோர்
கூறா வுலகங் குளிர்வித் தவனே. 47



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவொன் றறநின் றறிவா ரறிவிற்
பிறிவொன் றறநின் றபிரா னலையோ
செறிவொன் றறவந் திருளே சிதைய
வெறிவென்றவ ரோடுறும் வேலவனே.

48

தன்னந் தனிநின் றதுதா னறிய
இன்னம் மொருவர்க் கிசைவிப் பதுவோ
மின்னுங் கதிர்வேல் விகிர்தா நினைவார்
கின்னங் களையும் க்ருபைசூழ் சுடரே.

49

மதிகெட் டறவா டிமயங் கியறக்
கதிகெட் டவமே கெடவோ கடவேன்
நதிபுத்திர ஞான சுகா திபவத்
திதிபுத் திரர்வீ றடுசே வகனே.

50

உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியாய் யொளியாய்
க்கருவா யுயிராய்க்க கதியாய்
விதியாய்க்குருவாய் வருவா யருள்வாய் குகனே.

51

– கந்தர் அனுபூதி முற்றிற்று –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# அம்மா

தாய் தந்தையர் : கனகசபாபதிக் குருக்கள் இராசம்மாள்.
பிறப்பு : *1931* கார்த்திகை *18*ம் நாள்.
இடம் : தொல்புரம் பூதராசி அம்மன் கோவிலடி.
கல்வி : மெய்கண்டான் வித்தியாசாலை,
விக்டோறியா கல்லூாரி.
வாழ்விடம் : மருதோடைக் கந்தசுவாமி கோவிலடி,
மீசாலை மாவடிப்பிள்ளையார் கோவிலடி.
திருமண பந்தம் : மாமா - சோமசுந்தரக்குருக்கள்
மாமி - பல்வழநாயகிஅம்மா
துணைவர் - கோவிந்தராஜா ஐயர்
பிள்ளைகள் : பரமேஸ்வரி (கிளி), பரமேஸ்வரன் (இராசு),
ஸ்ரீஸ்கந்தராஜா (ஸ்ரீ), உதயகுமாரி (கௌசலா),
உதயகுமாரன் (சிவம்), அமரர் ஸ்ரீதரன் (மாம்பழம்),
கேதீஸ்வரி (மாலினி), வள்ளிகாந்தன் (காந்தன்)
வாழ்விடம் : வல்லை நெடியகாட்டு பிள்ளையார் கோவிலடி,
மட்டக்களப்பு,
நல்லூர் கந்தசுவாமி கோவிலடி,
மருதோடை கந்தசுவாமி கோவிலடி,
மீண்டும் நல்லூர் கந்தசுவாமி கோவிலடி.
இறைபதம் : *2012* ஆடி *21*ம் நாள்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்க முடியாத எங்கள் அக்கா !!

அக்கா !

அண்ணாவின் அன்பு மனைவி எங்களுக்கு அண்ணி, ஆனால் அண்ணி மச்சாள் என்று அழைத்ததே கிடையாது. அப்போது நாங்கள் சிறுபிள்ளைகள். மூத்த சகோதரி எமது அக்கா மறைந்த போது அந்தச் சில நாட்களின் பின்னர் அண்ணாவின் துணைவியாய் வந்த போது எமக்கு அக்காவாகிவிட்டீர்கள்.

நான் மட்டுமல்ல எனது உடன் பிறப்புக்கள், பொன்னு, கமலா, பொன்னம்மா எல்லோருக்கும் அக்காதான். பாசமுடன் ஏற்று நடந்தீர்கள். அது மட்டுமல்ல எம் குடும்பத்தை படிப்பிற்காக அணைத்து ஏற்று தாங்கி நடந்தீர்கள். தம்பி குட்டித்துரை!! என்று என்னை அழைத்த போதெல்லாம் நினைத்து என் உணர்வுகள் இன்று துடிக்கின்றது. அண்ணா வேலைமாறிச் சென்ற போதெல்லாம் அங்கெல்லாம் எம்மையும் அழைத்துச் சென்றீர்கள். தன் உடல் நலனையும் கருதாது எங்களை வளர்த்த நாட்களை எங்கள் சுவைகளை எங்கள் ருசிகளை உணர்ந்து செய்யும் உணவுகளெல்லாம் என் நாவில் ஊறுகின்றன. அவ் உணவுகளை நினைத்துப் பார்க்கிறேன். உங்கள் மறைவுச் செய்தி என்னை ஒரு கணம் ஆடவைத்தது. இன்னும் பல ரகசியங்களை எமக்கு தந்த ஒத்துழைப்புக்களை இதில் எழுதுவதானால் இடம் காணாது .....

அக்கா!

நான் உங்கள் குட்டித்துரையை கைப்பிடித்த போதுதான் உங்களைத் தெரியும். எனக்கும் அக்காவாகினீர்கள்.

எல்லோரோடும் பழகும் தன்மை பொறுமைசாலி சகோதரிபோல் பழகும் பாங்கு எங்கள் பிள்ளைகளை திருவிழாக் காலத்தில் பார்த்த பண்பு பாசம் இவைகளை நினைத்துப் பார்க்கிறேன். எனது ஒரு பிள்ளையைத் தவிர மற்ற அனைவரது திருமணத்தையும் இடம்பெயர்ந்து உங்கள் வீட்டில் இருந்தே நிச்சயித்து அனுப்பி வைத்தீர்கள். அந்த அழப்பெரிய சந்தர்ப்பமும் உங்களாலேயே அவைகள் எம் பசுமை நினைவுகளாய் ......

உங்கள் செய்தி என் கணவருக்கும் பிள்ளைகளுக்கும் பெரும் பேரிடிதான். ஆனால் உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

இங்ஙனம்
**மகராசா குட்டித்துரை குடும்பம்.**
**பிள்ளைகள் - கனடா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் என்னோடு இருக்கும் அக்கா !!

அக்கா !

அன்னைக்கு அன்னையாய் அகிலம் போற்றும் தெய்வமாய் வாழ்ந்த என் அக்கா !

நீங்கள் என்மேலும் என் குடும்பத்தார் மீதும் வைத்த எல்லையற்ற அன்பு எமக்குச் செய்த சேவைகள் உதவிகள் இவை எல்லாம் எடுத்தியம்ப எனக்கு வார்த்தைகள் வர மறுக்கின்றன. இப்போது நீங்கள் உயிருடன் இல்லை என்பதை நம்ப முடியாதெனக்கு. என் மனதிலே நீக்கமற நிறைந்துள்ளீர்கள்.

என் அன்னாவைக் கரம்பற்றி நீங்கள் என் வீட்டிற்கு வரும்போது எனது பராயம் மூன்று.

அன்று முதல் நீங்களும், அண்ணாவும் என்னை உங்கள் மூத்த மகளாக உள்ளன்போடு அரவணைத்தீர்கள். அமுதூட்டி அறிவுப்பசி தீர்த்து கண் இமை காப்பது போல காத்தீர்கள் என் ஒவ்வொரு நிலையிலும் எனது தேவையை உணர்ந்து என்காக எல்லாவற்றையும் முன்வந்து செய்தீர்கள்.

அவை ஒவ்வொன்றும் என் மனதில் இன்றும் பசுமரத்தாணி போல் பதிந்து உங்கள் அன்பை பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. என்னை பாடசாலைக்கு தினமும் அலங்காரம் செய்து அனுப்பி வைக்கும் நாட்கள் .....

பாடசாலை பரிசோதனைக் குழு வரும் நாட்களில் நீங்களாகவே எனக்கு புதுச் சட்டை தைத்து அணிவித்து அழகு படுத்தி அனுப்பிய நாட்கள் வீடு வந்து கற்பித்த ஆசிரியரிடம் அடிக்கவோ ஏசவோ கூடாது கட்டுப்பாடு விதித்த தோரணை ஒருநாள் நான் விட்ட தவறுக்காக ஆசிரியர் புத்தகத்தால் ஓங்கிய போது அவரை அன்றோடு வெளியேற்றிய துணிச்சல் அதற்காக என் அண்ணனிடம் வாங்கிய ஏச்சும் பேச்சும் எனது திருமண பட்டுப்புடவை எனக்கு பிடித்த நிறத்திலேயே என்பதற்காக மாப்பிள்ளையிடம் கதைத்து புடவைக்கடைக்கு என்னையும் அழைத்துச்சென்ற துணிவு .....

எனது பிரசவத்தின் போது நீங்களும் என் கூட நிற்கவேண்டுமென்று வைத்தியரிடம் வாதாடி கூடநின்றே பிரசவம் பார்த்த பாசத்தின் வெளிப்பாடு .....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் அருமை ஒரே மகன் ரமேஷிற்கு ஒரு சிறு தலையிடி வந்தாலும் பொறுத்துக் கொள்ள முடியாமல் பாரம்பரியத்தை மருந்தாய் உணர்ந்து தேங்காய் எடுத்து தலையை சுற்றி கொண்டு சென்று நல்லூரான் தேரடியில் உடைத்து சுகமாக்கி வைத்து மகிழ்ந்த நாட்கள்.....

இவை எல்லாம் நினைக்கும் போது நீங்கள் என் மனதில் அன்பின் வஸ்வரூபமாய் வியாபிக்கின்றீர்கள். என் வாழ்வின் ஒவ்வொரு நிகழ்வின் பக்கங்களிலும் உங்கள் பிரசன்னம் இருந்திருக்கிறது. இறுதிக் காலத்திலேயே நீங்களும் நானும் தொலைதூர இடைவெளியில் இருந்தபோதும் தொலைபேசி எங்களை இணைத்தே வைத்திருந்தது.

உங்களை கடைசியாக உயிருடன் காணவேண்டும் என்ற ஆவலில் ஓடி வந்த என்னை காணும் ஆவலிலே இருந்தீர்கள். ஆனால் காலன் விதியின் நியதி அந்த வாய்ப்பை எனக்கும் உங்களுக்கும் தரவில்லை. நீங்கள் என்றும் என் நினைவில் உயிருடனே இருக்கின்றீர்கள் என்ற செய்தி எமனுக்கும் தெரிந்திருக்கும். அதனால் தான் உங்கள் பிரியும் கணத்தில் என்னை அருகே வைத்திருக்கவில்லை என எண்ணுகிறேன்.

நீங்களும் தற்போது முருகன் அருகில் நலமாகவே இருப்பீர்கள். எங்கள் நினைவுகளும் அப்படியே இருக்கும்.

சுபம்

தங்கை
**பொன்னம்மா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா !! எங்கள் அம்மா

அம்மா!

நான் உங்கள் முதல் பிள்ளை என்மீது பாசத்தின் உச்சமாக கிளி என்றும் பெரியபிள்ளை என்றும் அழைத்தீர்கள். ஐயா ஆசிரியர், ஆனாலும் எட்டுப் பிள்ளைகள். அந்த வருமானத்தில் எங்கள் விருப்பங்களை நிறைவேற்றி வைத்தீர்கள். உங்கள் ஊக்கம் அந்த வருமானத்தில் எமக்கு விரும்பிய நகையும் மணிப்பத்தர் மூலம் செய்து தந்தீர்கள். ஐயாவுடன் என்றாவது முரண்பட்டது கிடையாது. நாம் காணவில்லை. இருவரும் எங்களுடன் மகிழ்ச்சியாகவே வாழ்ந்தீர்கள்.

அம்மா! என்னை இந்தியாவிற்கு அனுப்பி சங்கீதம் கற்பகதற்காக ஐயாவின் வருமானத்திலேயே அனுப்பி வைத்தீர்கள் அந்த தற்துணிவை இன்று உணர்கின்றேன்.

அம்மா! எனக்கு ஆசிரியர் தொழில் கிடைத்ததும் நீங்கள் அடைந்த மட்டற்ற ஆனந்தத்தை உணர்ந்தேன். என்னை திருமண பந்தத்தில் இணைப்பதற்கு தாங்கள் எடுத்த கடும் முயற்சியை எண்ணிப் பார்க்கின்றேன். எனது திருமணத்தின் பின் லண்டன் செல்வதற்கு தயாரான போது ஐயா கலங்கியவேளை அவரை தைரியப்படுத்தியதை நினைத்துப் பார்க்கின்றேன். உங்கள் உறுதியான முடிவுகளை எண்ணிப் பார்க்கின்றேன். அம் முடிவுகள் எம்மை வழிநடத்துகின்றது.

வாழ்க்கையில் நடைபெறும் சிறிய, பெரிய சம்பவங்களை நிகழ்வுகளை சில உதாரணங்கள் கூறி 'பேந்து பின்பு என்பது நடவாத காரியம்' வந்தவர்களை நீங்கள் வரவேற்ற பண்பை நினைத்துப் பார்க்கின்றேன். யாருக்கும் அக்காவான நீங்கள் உங்கள் உடல் நிலையை கருத்தில் கொள்ளாது விருந்தோம்பியதை........

உங்கள் விருப்பம் போல திருப்திப்பட என்னை பயிற்றுவிற்றுள்ளீர்கள் அதைத் தாங்கள் வயதான காலத்தில் எது செய்தாலும் 'பெரிய பிள்ளையை கேள்' என்று முடிவெடுக்கும் அனுபவத்தையும் கற்றுத் தந்துள்ளீர்கள். வாழ்க்கைத் துணிவையும் ஊட்டிவிட்டீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது உணர்வு உங்கள் எண்பதாவது பிறந்ததினத்தை கொண்டாடத் தூண்டியது 18.11.2011 மிக மகிழ்ச்சியாய் இருந்தீர்கள் எவ்வளவு வயதானாலும் நீங்கள் இருந்து எம்மை வழிநடத்தவேண்டும் என்ற ஆதங்கம்.......

உங்கள் அனுபவங்கள், புத்திமதிகள், பாசம், கண்டிப்பு, வளர்ப்பு, எம் உள்ளத்தில் நிழலில் ஆடும் நிகழ்வுகள்......பார்வை ஒன்றே போதுமா !

உங்களது அம்மா மிக வித்தியாசமான பிறவி நான் அப்படி ஒருவரை காணவில்லை எனக்கூறி, ஒவ்வொரு வருடமும் அனுப்பி வைத்து அவாவின் இழப்பை தாங்கமுடியாது என அத்தான் கூறுகின்றார்.

அம்மா! உங்கள் இழப்பின் தாக்கத்தை எல்லோரும் உணர்கின்றோம்.

உங்கள் நோய்களின் வேதனைகளை உணர்ந்து உங்கள் ஆன்மா சாந்தியடைய வேண்டும் என என்னாளும் பிரார்த்திக்கின்றோம்.

**என்றும் உங்கள் நினைவுடன்**

**- மகள் கிளி -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனதருமை மாமி !!

மாமி !

உங்கள் அடக்கமான தோற்றம் சாந்தமான முகம் அளவுடன் மென்மையாக பேசும் இயல்பு .....

“செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத்தவர்க்கு”

என்ற குறலுக்கு எற்ப வீட்டிற்கு வருபவர்களை அன்போடு உபசரித்த விருந்தோம்பும் பண்பு நிஜமாய் கண்டேன். இவையாவும் நிரம்பப் பெற்றவாம் தாம் நீங்கள். ஆமாம் இவ்வுலகில் நாம் பலரைச் சந்திக்கின்றோம் கழகுகின்றோம் ஆனால் மிகச் சிலரே மனதில் நீங்காத இடம் பிடிக்கின்றார்கள். அவர்களில் நீங்கள் தனித்தன்மை வாய்ந்தவர்கள் என்றால் மிகையாகாது.

சுட்டாலும் பால் சுவைகுன்றாது
அளவளவாய் நட்டாலும் நன்பல்லார் நண்பல்லர்
கெட்டாலும் மேன் மக்கள் மேன்மக்களே
சங்கு சுட்டாலும் வெண்மைதரும்

என்ற அவ்வையார் மூதுரைக்கு இலக்கணம் அமைத்து வாழ்வின் வசந்த காலங்களில் .......

அடக்கமாகவும் அல்லாத குளிர்காலங்களில் தளராது தம்நெறியில் தளராது உறுதியாக நின்று எம் எல்லோருக்கும் ஒரு சிறப்பான எடுத்துக்காட்டாக இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்ந்தீர்கள். உங்களின் ஆன்மா வானுறையும் தெய்வத்தின் திருப்பாதங்களை சேர்ந்து நிரந்தர ஆறுதல் அடைய எம்பெருமானைப் பிரார்த்திக்கிறேன்.

தக்கார் தகவிலார் என்பது அவரவர் எச்சத்தால் அறியப்பெறும்.

மருமகன்

**- ஸ்ரீஸ்கந்தராஜா -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதானம், நியமனம், நியமம், நிறுவல்

*அம்மா!*

எனது அறிவுக்கெட்டிய ஆரம்ப வயதை நினைத்துப் பார்க்கிறேன். என்னை நீங்கள் கண்டிப்பதை......

எனது குளப்படி உச்சம் என்று பட்டது நல்லூர் திருவிழா கடை முடிந்ததும் மண் பாப்பிள்ளை அடுக்கி வந்த கழிவு வைக்கோல் குவிந்திருந்தது. கடைக்குள் வைத்து கொழுத்திய போது அது பாரிய சுவாலை விட்டு எரிந்த போதும் நான் பயந்து வந்து சொன்னபோது மிகச் சாதாரணமாக மோட்டரைப் போட்டு அணைத்ததை ..... எனக்கு அடிக்கவில்லை. நான் பயந்து விடுவேனோ என நினைத்து படுக்க வைத்ததை .... அந்த நிகழ்வை நினைத்து இன்று உங்கள் நிதானத்தை உணர்கிறேன்.

எனது படிப்பு மங்கையற்கரசி வித்தியாசாலை. எனது குளப்படிக்காக வேலியில் பொட்டு வைத்து அதனூடாக அனுப்பியதையும் பின்னர் பள்ளி விடும் போது அப் பொட்டினூடாக கையைப் பிடித்து வீட்டிற்கு இழுப்பதையும் வீதிக்கு ஓடி விடுவாய் என கூறியதையும் எனக்காக முயலை வளர்த்து விளையாட வைத்து அது வீதியின் குறுக்காய் ஓடிய போது ஜீப் சில்லுக்கு அடையாய் கிடந்த (நல்லூர் கோவில் எஜமானின் ஜீப்) போது வெள்ளித்தலை கந்தசாமி என்னை தூக்கி வந்து பேசியதை .....

இன்று அந்த நியமத்தை உணர்கிறேன். இவை இன்றும் என் நினைவில் மிகச் சிலதே.

சிறிமா ஆட்சியில் அரிசித் தட்டுப்பாடு, தற்போது அதைப் பலர் மறந்திருப்பார்கள். அந்த இறுக்கமான நேரத்தில் ஓமந்தையில் வயல் செய்தோம். அன்று நாம் சோற்றைக் கொட்டிய போது நீங்கள் என்னைக் கண்டித்ததை நினைத்து திருந்தியதை இன்று நிறுவுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் நிரந்தர நித்திரையில் எனது தலைப்பில் இட்ட சொற்களை.....

எவருக்கும் கரைச்சலாய் இருக்கக் கூடாது. எனது வருத்தம் என்னோடு முடியட்டும். அதற்காக என்னைப் பார்ப்பதாகக்கூறி உரிமை கொண்டாடவும் எவருக்கும் இடமளிக்கவில்லை. வாழ்ந்த இடத்திலும் வழியனுப்பி வைப்பதற்கு எண்ணியபோதெல்லாம் சூழ்நிலையில் நியாயம் கற்பிக்க கூடிய வேளையில் நித்திரையானதேன்....

ஓ!! அங்குதான் நியமனமும் நிறுவலுமோ..

எவருடனும் பேசாது நடைமுறை நாயகியாய் நிரந்தர நித்திரையிலும் நியமன மோட்சமாய் அமைதி அடைந்து விட்டீர்கள்.

மோட்சம் என்தற்கு இதுதான் வரைவிலக்கணமோ !! ......

என்றும் உங்கள் மகன்
**ஸ்ரீயன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## அம்மா உங்கள் கடைக்குட்டி !!

அம்மா!

என்னிடம் எப்பவும் விசேடமான தனிப்பட்ட ஆதரவும் அன்பும் இருக்கின்றது. அவாவின் விருப்பத்துடனும், எனது விருப்பத்துடனும் வதனாவை திருமணம் செய்து வைத்தீர்கள். என்னிடம் திரும்பத்திரும்ப விருப்பமா? எனக் கேட்டே நடத்தி வைத்தீர்கள். எனது பிள்ளை உங்கள் பேரன் கணஷியாமைப் பார்த்து அவனுடைய படிப்பு, விளையாட்டு, ஆட்டம் இவைகளைப் பார்த்து ரசித்து பூரிப்படைந்தீர்கள். உங்கள் கடமைகளை செய்வதற்கு என்றும் நான் பின்னின்றதில்லை. உங்கள் ஸ்தானத்தை எவராலும் நிவர்த்தி செய்ய முடியாது எனது துயரத்தை இதில் விபரிக்கவும் முடியாது. நான் ஓர் உன்னத இடத்தில் உங்களை உணர்கிறேன்.

உங்கள் ஆத்மாவின் சாந்திக்காக என்றும் பிரார்த்தித்துக் கொண்டிருப்பேன்.

உங்கள்
**வள்ளிகாந்தன், வதனா, கணஷியாம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது உயிரை எனக்கு தந்த எனது அம்மம்மாவிற்கு நான் எழுதும் கதை

எனது பாசமிகு அம்மம்மா! உங்களது உயிர் போகும் நேரம் தெரிந்துதான் உங்களோடு வந்து நானும் எனது தங்கையும் சேர்ந்து இருந்தோம். அம்மம்மா எனது கடமையை உங்களுக்கு கடைசி நிமிடத்தில் சரிவர செய்து முடித்தேன். உங்கள் உயிர் போகும் வரை நான் உங்கள் முன் நின்று பார்த்தேன்.

அம்மம்மா! கடைசியாக நீங்கள் எங்களைத்தான் உங்கள் அரவணைப்பில் கடைசிகாலம் வரை இருப்பதற்கு என்னையும், எனது அம்மா மாலினியையும், ஸ்ரீ மாமா, வள்ளி மாமா நான் வழிபடும் அம்மன் சொல்லியிருக்கின்றா. அதனால் தான் வடிவா பார்த்துவிட்டு போனீங்கள். உங்கள் பேர்த்தி சௌதாமினியையும், எனது தங்கையையும் தூக்கி தாலாட்டி பாலூட்டி விட்டு உங்கள் மடியில் அரவணைத்து விட்டு போனீர்கள். எங்கள் தேவைகளை நிறைவேற்றி வைத்து இறைவனடி சேர்ந்தீர்கள்.

முருகன் மணியோசை கேட்கும் போது கூட அம்மம்மா முருகா என்னையும் கொண்டு போய்ச் சேரப்பா என்று சொல்வீர்கள். சொந்தப் பிள்ளைகளுக்கும், பேரப்பிள்ளைகளுக்கும் கரைச்சல் கொடுக்க கூடாது என்று கூறுவீர்கள். ஒவ்வொருவரும் கரைச்சல் தரக்கூடாது என அம்மம்மா வாழ்ந்தும் காட்டினார். எனது அம்மம்மா இருந்து பிள்ளைகளுக்கு பேரப்பிள்ளைகளுக்கு உறவினர்களுக்கு கூட நல்லதைச் செய்தீர்கள். இறைவனடி சேர்ந்தும் அவர் பாதம் நண்ணினார்.

அம்மம்மா ஆத்மசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

பாசமுள்ள
பேரப்பிள்ளை
**சௌதாமினி, சோபனா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்



*21.07.2012* அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி
அமரர். திருமதி. பர்வதாம்பாள் கோவிந்தராஜா அவர்கள்
இறைபதம் அடைந்த செய்தி கேட்டு உடன் வந்து
எங்கள் துன்பத்தில் பங்குகொண்ட அயலவர்கள்,
உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும்,
நேரில் சமூகமளிக்கமுடியாத நிலையில்
தொலைபேசி மூலம் வெளிநாட்டிலிருந்து
அனுதாபம் தெரிவித்தோருக்கும், அனைத்து
வழிகளிலும் உதவிய அன்பு நெஞ்சங்களுக்கும்,
இறுதி நிகழ்வில் கலந்து கொண்டோர்,
அந்தியேட்டி கிரியைகளிலும்
ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து
கொண்ட அனைத்து உறவுகளுக்கும்,
இம்மலரினை சிறப்புற அச்சிட்டு தந்த
கொக்குவில் சோதிடப்பிரகாச யந்திரசாலை
அச்சகத்தாருக்கும் எமது மனமார்ந்த
நன்றியை தெரிவித்துக்
கொள்கின்றோம்.

203, கோவில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**மைத்துனி பொன்னம்மா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சோதிடப் பிரகாச யந்திரசாலை, கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org